ஞாலகுருவின் படைப்புக்கள்

# அனைவருக்கும் வழிகாட்டும் ஞானப் பெருஞ்சுடர்!

ஆனி மாதம், இந்துமத ஆண்டு 43,73,125

மதம்தான் ஒழுக்கத்தையும்,
நன்னடத்தையையும்,
தன்னலமற்ற தொண்டு
மனத்தையும், அனைவரையும்
அரவணைத்துச் செல்லும்
பரந்த போக்கினையும்,
தாய்மொழிப் பற்றினையும்,
தாய்நாட்டுப் பண்பாட்டுப் பிடிப்பினையும்,
நாகரிக ஈடுபாட்டினையும்
வளர்த்திடும் தலைவர்களை
உருவாக்கிடும்.



குவலய குருபீடக் குருதேவர்,
12வது பதினெண்சித்தர் பீடாதிபதி,
குருமகாசன்னிதானம், ஞானாச்சாரியார்,
ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூரர்.

இந்து இலக்கியக் கழக வெளியீடு.

**43,73,125ஆம் ஆண்டின் ஆனி மாத வெளியீடு.**

***தலைப்பு:-*** **"அனைவருக்கும் வழிகாட்டும் ஞானப் பெருஞ்சுடர்"**

# உள்ளுறை

1. **"அனைவருக்கும் வழிகாட்டும் ஞானப் பெருஞ்சுடரே குருதேவர்!"** - விருதுநகரைச் சேர்ந்த புதிய அறிமுகத்தார் ஒருவருக்கு குருதேவர் எழுதியருளிய செயல்விளக்கத் திருவோலை.
2. **"பண்பாட்டுப் புரட்சிக்குரிய முயற்சிகள்"** - முந்திய அஞ்சல் வடிவக் கட்டுரையைப் பெற்றவருக்கே குருதேவர் அவர்கள் அருட்பட்டங்கள் வழங்கி வாழ்த்துத் திருவோலையாக எழுதிய நெடிய அஞ்சல் வடிவக் கட்டுரை.
3. **"வரலாற்றுச் சிறப்பு மிக்க சேலம் மாவட்டப் பயிற்சி முகாம்"** - சேலம் மாவட்டத்து வேம்படிதாளம் என்ற ஊரைச் சேர்ந்த மாணுக்கருக்கு குருதேவர் விடுத்த செயல்நலம் பாராட்டுத் திருவோலையும், செயல்திட்டப் பரிந்துரை அறிவிக்கையும்.
4. **"கடவுள்களுக்கு எல்லை உண்டு!"** - இந்துவேதப் படி இந்த உலகில் உள்ள அனைத்துக் கடவுள்களுக்கும் அவரவர்களின் செயல்பாடுகளுக்கு எல்லை, வரையறை உண்டு என்பதை விளக்கிடும் சிறிய குறிப்பு.

# அனைவருக்கும் வழிகாட்டும் ஞானப் பெருஞ்சுடரே குருதேவர்!

சென்னை - 53,
25-6-92.

அனுப்புதல்:
தலைவர் அவர்கள்,
அந்தணர் அண்ணல், ஞானச்சாரியார்,
13, குமாரசாமி முதலித் தெரு,
வரதராசபுரம், அம்பத்தூர்.

பெறுதல்:
T. பகவத் சிங், ஓய்வு பெற்ற தமிழாசிரியர்,
98, A.P. சண்முகம் தெரு,
விருதுநகர்.

திருவருட்செல்வ!, பகவத் சிங் அவர்கள் சமூகத்திற்கு பதினெண்சித்தர் மடத்திலிருந்து குருபீடத்தின் திருவுளக் கருத்தறிந்து விடுக்கப்படும் செயல்விளக்கத் திருவோலை:

1) இன்று 26.6.92இல் வெள்ளிக்கிழமை மதுரையிலிருந்து வந்திருந்த அருள்மிகு தாயுமானவர் சன்னிதானம் சித்தரடியார் M.C. இராமன் அவர்கள் பதினெண்சித்தர் மடத்திலிருந்து தங்களுக்கு அனுப்பப்பட்ட

அஞ்சல்களில் எதுவும் தங்களுக்குக் கிடைக்கவில்லை என்ற செய்தியைத் தெரிவித்தார். இது குறித்து குருபீடம் மிகவும் வருத்தம் தெரிவித்தது.

2) பதினெண்சித்தர் மடத்தில் அன்றுடம் குறைந்தது 20, 30 அஞ்சல்களாவது எழுதப்பட்டு வெளியே அனுப்பப்படுகின்றன. இதனுல் ஒரே மாதிரியான அஞ்சல் இரண்டு மூன்று பேர்களுக்குக் கூட ஒரே அஞ்சலை நகல்கள் எடுத்து பெயர் மட்டும் மாற்றம் செய்து அனுப்பப்படுவது மரபு. அந்த மரபு வழிச் செயல்பாட்டில் பிழை ஏதேனும் நிகழ்ந்திருக்கலாம் என்று எண்ண வேண்டியிருக்கிறது. எனவே, தங்களுக்கு அனுப்பப்பட்ட "செயல்நலம் பாராட்டுத் திருவோலை"யின் கருத்தோட்டத்தோடு இந்த "செயல்நிலை விளக்கத் திருமடல் கருத்தோட்டமும்" இணைந்து இத் திருவோலை விடுக்கப்-படுகின்றது.

3) தாங்கள் ஆம்பூரில் பணியாற்றிய காலத்து பதினெண்சித்தர் மடத்தின் அறிவிக்கையைப் பெற்று மதுரை சென்று அருள்மிகு சமயக்குரவர் நால்வர் திருத்தோன்றல் சித்தரடியார் திரு த. கேசவனைச் சந்தித்த விசயமும், அடுத்து பதினெண்சித்தர் மடத்து அடியார்களுடன் பேரார்வத்துடனும், மாரு ஈரத்துடனும், மிகச் சிறந்த தியாக ஈகத்துடனும், அளப்பரிய பத்தி உணர்வுடனும் தொடர்பு கொண்டு செயலாற்றும் செயல்திறனை வியந்து இந்து மதத்தின் முழுமுதற் ஆச்சாரியக் குருபீடம் மிகவும் மகிழ்ந்து வாழ்த்துகிறது, பாராட்டுகிறது.

4) தங்களைப் போன்று நம் நாட்டில் ஓய்வு பெற்றுள்ள ஆசிரியப் பொதுமக்கள் மட்டும் ஒன்றுதிரண்டு ஒற்றுமை பெற்று, பத்திநெறியைப் பரப்ப வேண்டும் என்று முடிவெடுத்திட்டால் போதும்; நமது தனிமனித வாழ்வு, குடும்ப வாழ்வு, சமுதாய வாழ்வு, அரசியல் வாழ்வு, ... முதலிய அனைத்திலும் உள்ள அகம்பாவம், ஆணவம், பேராசை, பதவிப் பித்து, அதிகார வெறி, தானென்ற வீம்பு, தற்செருக்கு, முரட்டுப் பிடிவாதம், தன்னலம், ... முதலிய தீய

பண்புகள் அனைத்தும் கணிசமான அளவு கட்டுப்படுத்தப் பட்டு, குறைக்கப்பட்டுவிடும். அதனால், நன்கு பக்குவப்பட்ட, புடம் போடப்பட்ட, பாரம்பரியப் பண்பாடு உடைய தலைவர்கள் விரல் விட்டு எண்ணக் கூடிய அளவிற்குத் தயாராகி விடுவார்கள்.

5) **மதம்தான் ஒழுக்கத்தையும், நன்னடத்தையையும், தன்னலமற்ற தொண்டு மனத்தையும், அனைவரையும் அரவணைத்துச் செல்லும் பரந்த போக்கினையும், தாய்மொழிப் பற்றினையும், தாய்நாட்டுப் பண்பாட்டுப் பிடிப்பினையும், நாகரிக ஈடுபாட்டினையும் வளர்த்திடும் தலைவர்களை உருவாக்கிடும்.** அப்படிப்பட்ட தலைவர்கள், அநேகமாக நூற்றாண்டுக் கணக்கில் நமக்குக் கிடைக்கவில்லை என்றுதான் கூற வேண்டும். இதற்காகத்தான் நான்கு யுகங்களுக்கு முன்னரே, பதினெண்சித்தர்கள் தங்களுடைய தாய்மொழியான அண்டபேரண்ட அருளுலக ஆட்சிமொழியுமான அருளூறு அமுதத் தெய்வீகச் செந்தமிழ் மொழியில் இந்து வேதத்துக்குரிய முன்னூற்றுத் தொண்ணூற்றாறு நூல்களையும் (396), இந்து மதத்துக்குரிய முப்பத்தாறு (36) நூல்களையும் அருளினார்கள். அவைதான், கடந்த நான்கு யுகங்களாக இம்மண்ணுலகத்தைக் காத்து வருகின்றன. அதாவது இன்றைய 1992 என்ற கிறித்தவ ஆண்டுக் கணக்கின்படி இந்துமத ஆண்டு நாற்பத்து மூன்று இலட்சத்து, எழுபத்து மூன்றாயிரத்து, தொண்ணூற்று மூன்று ஆண்டுகள் (43,73,093) ஆகின்றன. இவ்வளவு பெரிய நெடுங்காலமாக மனிதர்கள் அதிக அளவில் ஒருவரோடு ஒருவர் அடித்துக் கொண்டு அழிந்து போகாமல் பாதுகாத்து வருவது பதினெண்சித்தர்களுடைய இந்து வேதமும், இந்து வேத மதமான இந்து மதமும்தான்.

6) இந்த இந்து வேதமும், இந்து வேத மதமான இந்து மதமும் மட்டும்தான் **"இந்த உலகம் முழுவதும் தோன்றக் கூடிய அனைத்து**

**வகையான மொழியினருக்கும், இனத்தவருக்கும், நாட்டவருக்கும் உரிய பொது வேதம், பொதுமதம்**" என்று அறிவிக்கப்பட்டிருக்கின்றன.

7) இன்றைக்கும் உலக மொழிகளும், இனங்களும், நாடுகளும் கடைப்பிடிக்கின்ற வாழ்வியல் மதிப்பீடுகளும், மரபுகளும், பழக்க வழக்கங்களும், நடைமுறைகளும், ... உற்று நோக்கி ஆராயப்பட்டால், அனைத்துக்கும் ஒரே ஓர் அடிப்படை ஒன்று இருந்திருக்க வேண்டும், அல்லது இருக்கின்றது என்ற பேருண்மை விளங்கிடும். இந்தப் பேருண்மையின் சுருக்க விளக்கமாகத்தான்;

(அ) "தமிழர்கள்தான் இம்மண்ணுலகைச் சார்ந்த அருளுலகின் மூலவர்கள், காவலர்கள், நாயகர்கள், தத்துவ வாரிசுகள், ஞானவித்துக்கள் ...."

(ஆ) "தமிழகம்தான் அருட்பயிரினங்களின் விதைப்பண்ணை, நாற்றுப்பண்ணை, நாற்றங்கால்."

(இ) "தமிழரின் உள்ளங்களும், இல்லங்களும்தான் அருட்பயிரின நாற்றங்கால்கள், விதைப்பண்ணைகள், நாற்றுப்பண்ணைகள்."

(ஈ) "தமிழ்நாடுதான் அருளுலகத்தவரின் பிறப்பிடம், தாயகம், இருப்பிடம்."

(உ) "தமிழகம்தான் கடவுள்களின் பிறந்த வீடு, தாய்மண், தாய்நாடு."

(ஊ) "தமிழ்மொழிதான் கடவுளர் மொழி, தெய்வமொழி, தேவமொழி, வேதமொழி."

(எ) "தமிழ்மொழியில்தான் கடவுளர்களின் வகைகள், வடிவங்கள், வாழ்க்கைச் செய்திகள், வரலாறுகள், ... முழுமையாக இருக்கின்றன."

(ஏ) "தமிழ்மொழிக் கடவுள்கள்தான் காலங்கள் தோறும் மனிதர்களைச் சந்தித்துக் கொண்டிருக்கிறார்கள்; மனிதர்களுக்கு பத்தி, சத்தி, சித்தி, முத்தி, சித்து விளையாடல்கள் முதலியவைகளைத் தந்து கொண்டிருக்கிறார்கள்."

(ஐ) "தமிழ்மொழி வழிப் பூசை மொழிகளும், முறைகளும், நெறிகளும், விதிகளும், சட்டதிட்டங்களும், மரபுகளும், நம்பிக்கைகளும், கொள்கைகளும், கோட்பாடுகளும்தான் ஒவ்வொரு கோயிலிலும் குறைந்தது ஒரு கடவுளாவது அக்கோயிலுக்கே உரிய கடவுளாக வாழுகின்ற நிலையைத் தொடர்ந்து வளர்த்துக் காத்து வருகிறது."

... ... ... ... ... ...

என்ற பேருண்மைகளை, பதினெண்சித்தர்களின் வாக்குகளை, வாசகங்களை விரிவஞ்சி நிறுத்துகிறோம்.

8) இந்த இந்து வேதம், இந்து மதம், ... முதலிய பொருளாழமிக்க அழகிய இனிய வண்டமிழ்ச் சொற்களின் வடிவாகத்தான் 'இந்தியா' என்ற சொல் இருக்கின்றது. உலக மொழிகளிலேயே அல்லது இந்திய மொழிகளிலேயே ஒண் தீந்தமிழில்தான் <u>ஒலிநயம் கெடாமல்</u>, பொருள்நயம் கெடாமல் '<u>இந்தியா</u>' என்ற சொல் எழுதப்படுகிறது. பதினெண்சித்தர்களால் **'பாரதம்'** (<u>பார் + அதம் = மிகப் பெரிய அழிவிற்குப் பிறகும் பார்ப்பதற்கு உரிய நிலமாக இருக்கின்ற இடம் => மிகப் பெரிய அழிவிற்குப் பிறகும் மிஞ்சியிருக்கின்ற நிலம்</u>) என்ற பெயராலும்; **'இந்தியா'** (<u>இந்து + யாண்டும் => இந்து வேதமும், இந்து மதமும் எங்கும் பரவியுள்ள, உயிரணுக்கள் நிறைந்த இடம் => இந்தியா</u>) என்ற பெயராலும் பொருளுடைய சொற்கள் வழங்கப்பட்டிருக்கின்றன.

9) இந்து வேத நூல்களையும், இந்து மத நூல்களையும் ஏட்டில் எழுதியும், நாட்டில் எடுத்துப் பேசியும் எதிர்பார்த்த பயன் விளையவில்லை. ஏனென்றால், போலியான, பொய்யான, கற்பனையான, மாயமான "*ஹிந்து மதம்*", "*ஹிந்து வேதம்*" ... என்பவை இந்நாட்டில் நிலவுகின்றன. இந்த *ஹிந்து மதத்திற்கு* கட்டுப்பாடான தலைமைப் பீடங்கள், தலைமை மடங்கள், தலைமை ஆச்சாரியார்கள், தலைமை சன்னியாசிகள்,

தலைமைச் சாமியார்கள், தலைமைக் குருக்கள்கள், ... தொடர்ந்து இருந்து வருகிறார்கள். எனவேதான், *ஹிந்து மத* மாயையில், *ஹிந்து மத* இருளில், *ஹிந்து மத* அந்தகாரத்தில் அனைத்தும் மறைந்து நிற்கின்றன. ஆனால், **இந்து மதத்**திற்கு என்று உருவாக்கப்பட்ட அல்லது தோற்றுவிக்கப்பட்ட அல்லது தோன்றியுள்ள தமிழ் மடங்கள், ஆதீனங்கள், தம்பிரான்கள், சாமியார்கள், பண்டாரங்கள், பூசாறிகள், ... முதலியவர்களுக்கிடையில் உறவு இல்லை, உரையாடல் இல்லை, ஒற்றுமை இல்லை, பற்று இல்லை, தோழமை இல்லை, தத்துவப் பொதுநோக்கு இல்லை, மக்கள் தொடர்பு இல்லை, ... எனவேதான், சித்தர் நெறி எனும் சீவநெறியான **மெய்யான இந்துமதம்** சைவநெறியாகி, சைவ சித்தாந்தமாகி எங்கெங்கோ ஓடி ஒளிந்து, புதைந்து, மறைந்து கிடக்கும் நிலை உருவாகி விட்டது.

10) இவற்றையெல்லாம் எண்ணித்தான் இந்து மதத்தின் முழுமுதல் ஆச்சாரியாராக, குருதேவராக, இந்து வேதத்தை இம்மண்ணுலகுக்கு வழங்கிய பதினெண்சித்தர் மடத்தின் மடாதிபதியாக, இந்து மதத்தை இம்மண்ணுலகில் தோற்றுவித்த பதினெண்சித்தர் பீடத்தின் பீடாதிபதியாக, கருமூல ஆதீனமாக, ... தோன்றியுள்ள நமது குருமகாசன்னிதானம், ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூறார் அவர்கள் தொடர்ந்து செயல்பட்டு குருகுலம், திருகுலம், தருகுலம், கருகுலம், ... முதலியவைகள் அமைத்து ஆயிரம் ஆயிரம் அருட்கலைஞர்களை, அருள்ஞானிகளை, அருட்கணிப்பாளர்களை, அருட்தொண்டர்களை, ... உருவாக்கி அருளுலகப் பொருளுலக இருள்களும், இன்னல்களும், இடுக்கண்களும், இல்லாமைகளும், இயலாமைகளும் இல்லாமல் போகச் செய்வதற்கு முயற்சித்து வருகிறார். <u>ஆனால்!? ... ஆனால்!!?? ... ஆனால்!!!??? ... வேலையினின்று ஓய்வு பெற்றவர்களும் அருட்பணியாற்ற முன்வரத் தயாராக இல்லை; வேலையின்றி வாடும் இளைஞர்களும் அருட்பணியாற்ற முன்வரத் தயாராக இல்லை. எல்லா வசதிகளோடு</u>

<u>வாழுகிறவர்களும் அருட்பணியாற்றத் தயாராக இல்லை; எந்தவித வசதியும் இல்லாமல் வாடுகிறவர்களும் அருட்பணியாற்ற முன்வரத் தயாராக இல்லை.</u> **<u>குருதேவர் மட்டும் ஞானப் பெருஞ்சுடர் ஒன்றை சுடர் விட்டெரியும் தீப்பந்தமாகக் கையில் பிடித்தபடி அனைவருக்கும் அழைப்பு விடுத்துக் கொண்டு அந்தகார இருளைக் கிழித்துக் கொண்டு நடைபோடுகிறார்???!!!</u>**

11) பேரன்புடையீர்! குருபீடம் தங்களுக்காக இன்று நேரடியாக திருவாய் மலர்ந்தருளிய வாக்கு அப்படியே இந்த அஞ்சலில் வடிக்கப்பட்டு அனுப்பப்படுகிறது. இதன் மூலமாகவாவது, நீங்கள்

(1) "இந்து மறுமலர்ச்சி இயக்கம்" (தனிமனித வாழ்வுக்கும், குடும்ப வாழ்வுக்கும் உரியது),

(2) "இந்து முன்னேற்றக் கழகம்" (சமுதாய வாழ்வுக்கும், அரசியலுக்கும் உரியது),

(3) "சித்தர் கருவூரார் வாரவழிபாட்டு மன்றம்",

(4) "சித்தர் கருவூரார் அருட்கோட்டம்" (யாகசாலை வைத்து மந்திரித்து அருள் வழங்குவது),

(5) "சித்தர் கருவூரார் அருட்பணி விரிவாக்கத் திட்ட மையம்" (கோயில் உயிர்ப்பு, புத்துயிர்ப்பு, அருளாளர்களைத் தயாரித்தல், இந்துவேதம் வளர்த்தல், இந்துமதம் காத்தல்),

... முதலிய நிறுவன நிருவாகங்களை உங்களால் முடிந்தவரை உங்களுடைய ஊர், வட்டம், வட்டாரம், மாவட்டம், மண்டலம், ... என்று படிப்படியாக உருவாக்கிட முன்வாருங்கள். உங்களின் மூலம் பலரும் உங்களைப் போல் உழைக்க முன்வரச் செய்யுங்கள்.

12) ஆசிரியப் பெருமக்கள், நமது முன்னோர்களின் நூல்களைக் கற்றிட, கற்பித்திட, போற்றிப் பேணிப் பாதுகாத்துப் பரப்பிட முன்வர வேண்டும். குறிப்பாகத் தமிழாசிரியர்கள்தான் முன்வர

வேண்டும். நமது நூல்கள்தான் நமது கருவிகள், சாதனங்கள், விழிகள், வழிகள், வழிகாட்டிகள், வழித்துணைகள், வழிப்பயன்கள், ... புரிந்த வரை புரிந்து, முடிந்த வரை செயல்படுங்கள். விரும்பினால் குருபீடத்தைக் காண வாருங்கள். அல்லது குருபீடம் உங்களைக் காண வர ஏற்பாடு செய்யுங்கள். தாங்கள் காரிருளை விரட்டும் கதிரவனாகச் செயல்பட வேண்டும் என்று குருபீடம் வாழ்த்துகிறது.

**மந்திராலயம்,**
**இந்து வேத பாடசாலை,**
**அந்தணர் அண்ணல், ஞானாச்சாரியார்,**
13, குமாரசாமி தெரு,
(அம்பத்தூர் இரயில்வே நிலைய வாசல் அருகில்),
வரதராசபுரம், அம்பத்தூர், சென்னை - 53.

ஓம் திருச்சிற்றம்பலம் ஓம்!

**பதினெண்சித்தர் மட அலுவலகம்**

நகல் எழுதியவர்:-

அருள்மிகு கடந்தப்பட்டி பெரியாண்டிச்சி சன்னிதானம், சித்தரடியார் மா.தியாகராசன் B.Sc., கடந்தப்பட்டி, பாச்சல் P.O., நாமக்கல் taluk, சேலம் District.

**<u>நகல் தயாரிப்பது:</u>**

மேற்கு மண்டல இ.மு.க. தலைமையகம், 17, கவரைத் தெரு, இராசிபுரம் - 637408.

**//உண்மை நகல்//**
**//இதன் மூலநகல்: கையெழுத்துப் பிரதியாகக் கிடைத்தது.//**

# பண்பாட்டுப் புரட்சிக்குரிய முயற்சிகள்

ஓம் குருவே துணே!

சென்னே - 53,
4-7-1992.

அனுப்புதல்:
தலேவர், குருதேவர், அந்தணர் அண்ணல், ஞாஞச்சாரியார்,
இந்து வேத பாடசாலே,
வரதராாசபுரம், அம்பத்தூர், சென்னே - 53.

பெறுநர்:-
உயர்திரு பகவத் சிங்,
98, A.P.சண்முகம் தெரு, விருதுநகர் - 626001,
காமராாசர் மாவட்டம்.

1. அருள்மிகு ஆத்தாள் தேவி விருதுநகர் மாரியம்மன் சன்னிதானம்,
2. அருள்மிகு தாத்தா ஆதிசங்கராச்சாரியார் ஆதீனம்,
3. அருள்மிகு விருதுநகர் காமகோடிப் பீடம்,
4. விருதுநகர் பெரியவாள்,
5. அருள்மிகு கடவுளாச்சாரியார்,
6. அருள்மிகு தேவசேஞதிபதி திருச்செந்தூர் முருகப்பெருமான் பண்டார சந்நதி,
7. அருள்மிகு தாத்தா மதுரைப் பாண்டி முனீசுவரர் கட்டளேத் தம்பிரான்,
8. சித்தரடியார் தி. பகவத் சிங் B.A., M.Ed., அவர்கள்,
98, A.P.சண்முகம் தெரு, விருதுநகர் - 626001.

<u>தொடர்பு:-</u>

குவலய குருபீடத்தின் 26.6.92ஆம் நாளைய திருமடலுக்கு தாங்கள் 2.7.92இல் எழுதிய பதில் இன்று 4.7.92இல் கிடைத்து தங்களுக்கு அருட்பட்டங்கள் அருளி விடுக்கப்படும் வாழ்த்துத் திருவோலை.

1) ஆன்மீகத் துறையில் ஆழ்ந்த ஈடுபாடுள்ள பெரியீர்! தங்களுக்கும், தங்களது திருக்குடும்பத்தாருக்கும், உற்றார் உறவினர்க்கும் எல்லா நலங்களும், வளங்களும், வெற்றிகளும் விளைந்திட குருமகாசன்னிதானம், ஞாலகுரு குருதேவர் வாழ்த்துகிறார்.

2) தங்களுடைய திருக்குடும்ப விவரத்தினை பதினெண்சித்தர் மடம் தெரிந்து கொள்ள தன்னிலை விளக்கப் படிவம் அனுப்பப்படுகிறது. அதை நிறைவு செய்து அனுப்பவும்.

3) தாங்கள் ஏற்கனவே பல திருச்சபைகளில், மன்றங்களில், சங்கங்களில், கூட்டங்களில் நல்ல தொடர்பு கொண்டுள்ளவராகக் குருபீடம் கேள்விப்பட்டிருக்கிறது. அது குறித்து திருமடம் வாழ்த்துகிறது.

4) இன்றைக்கு நாட்டு நடப்பில் புகழ் மிகுந்த அருளாற்றலுக்குரிய கோயில்கள் பரவலாக எண்ணிக்கைக்குரிய அளவு மிகுதியாக இருக்கின்றன. இதேபோல் அந்தந்த தேவதைகள், தேவிகள், இருடிகள், முனிவர்கள், அமரர்கள், பட்டவர்கள், மாண்டவர்கள், ஆண்டவர்கள், தெய்வங்கள், கடவுள்கள், எல்லாக்கள், இறைவர்கள், ... எனப்படும் 48 வகைப்பட்ட கடவுள்களிடமிருந்து சத்திகளையும், சித்திகளையும் பெற்றவர்கள் நாடு முழுவதும் புகழோடு செயல்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். இவர்களால் ‘வார வழிபாட்டு மன்றங்களும்’, ‘பாதயாத்திரைக் குழுக்களும்’, ‘திருச்சபைகளும்’, ‘திருச்சங்கங்களும்’, ‘அருள்நெறித் திருக்கூட்டங்களும்’, ‘பசனைக் கூடங்களும்’, ‘பத்தர் சங்கங்களும்’, ‘அருள்வாக்குக் கூடங்களும்’, ‘சித்துக்கள் விளையாடும் பீடங்களும், மடங்களும்’, ... என்று பல நிறுவன நிருவாகங்கள்

நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாகத் தோன்றித் தோன்றி வளர்ந்து கொண்டே இருக்கின்றன.

**<u>குறிப்பு:-</u>** மேற்படி அனைத்து நிறுவன நிருவாகங்களுக்கும் கோடிக் கணக்கில் பொருளைக் கொட்டிக் கொடுப்பவர்கள் இருந்து கொண்டே இருக்கிறார்கள். ஆனால், இவைகளும், இவர்களும் இந்து மதம் எனும் தோட்டத்திலே பயிரான புல் பூண்டுகளாக, செடிகொடிகளாக, மரங்களாக இருந்து விளைவித்துத் தரும் இலை, தழை, அரும்பு, மலர், காய், கனிகளே ஆகும் என்ற பேருண்மை யாருக்குமே தெரியவில்லை, தெரியவில்லை, தெரியவில்லை, தெரியவே இல்லை; புரியவில்லை, புரியவில்லை, புரியவில்லை, புரியவே இல்லை.

5) இவை பற்றி ஆழ நினைத்து நீளச் சிந்திக்கும் போதுதான் அருளுலகில் உள்ள பெரும்பாலான பத்தியாளர்களின், சத்தியாளர்களின், சித்தியாளர்களின், முத்தியாளர்களின் அறியாமை, தெரியாமை, புரியாமை, தற்செருக்கு, தானென்ற அகம்பாவ ஆணவம், புகழ்வெறி, பதவி வெறி, மடமை, மூடநம்பிக்கை, ... முதலியவைகளால் நமது மதம் என்பது பற்றிய நினைவோ, அறிவோ, சிந்தனையோ, உணர்வோ, செய்தியோ, ... வடிவப்படாமல் போய்விட்டன, வாழ்வு பெறாமல் போய்விட்டன.

எனவேதான் பல ஆயிரம் மைல்களுக்கு அப்பாலிருந்து வந்துள்ள மதங்களும், மதங்களின் வேதங்களும், வேதங்களின் கடவுள்களும், கடவுள்களை ஒட்டிய அருளாளர்களின் வரலாறுகளும், வாழிடங்களும், அவர்களின் போதனைகளும், சாதனைகளும், ... நம் நாட்டில் நல்லாட்சி நடத்த வந்தன.

6) நம் மக்களோ மாற்று மதங்களின் வளர்ச்சியைக் கண்டு போட்டியும், பொறாமையும் கொண்டு கண்மூடித்தனமாகக் கண்டபடி அநாகரிகமாகவும், வெறியாகவும் மாற்று மதங்களை வசைபாடித்

திட்டித் தீர்க்கவும்; அவற்றோடு சண்டை சச்சரவுகளையும், கலகம் கச்சராக்களையும் வளர்த்துக் கொண்டு வாழுகிறார்கள் நம்மில் பலர்.

**குறிப்பு:-** நம் நாட்டில் மாற்று மதங்களையும், வேற்று வேதங்களையும், அன்னிய மத வரலாறுகளையும், வாழ்வியல்களையும் திட்டித் தீர்த்து, முட்டி மோதி, போட்டா போட்டிகளையும், போராட்டங்களையும், பூசல்களையும், சண்டை சச்சரவுகளையும் வளர்ப்பதற்கென்றே அரசியலின் பெயரால் சில நிறுவனங்களும், இந்து மதத்தின் பெயரால் சில நிறுவனங்களும், இந்து சமுதாயத்தின் பெயரால் சில நிறுவனங்களும் தொடர்ந்து நூற்றாண்டுக் கணக்கில் வெளிப்படையாகவும், இலைமறை காயாகவும் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன. இவைகளால்தான் மாற்று மதங்கள், வேற்று வேதத்தவர்கள், அன்னிய நாட்டவர்கள் மிகுந்த சுறுசுறுப்போடும், எச்சரிக்கையோடும் நன்கு திட்டமிட்டு இந்து வேதத்தையும், இந்து மதத்தையும், இந்து சமுதாய வாழ்வியல் நடைமுறைகளையும், நம்பிக்கைகளையும், வாழ்வியல் மதிப்பீடுகளையும், சடங்கியல்களையும், பண்பாடுகளையும் மிகப்பெரிய அளவில் சிதைத்துச் சீரழித்துத் தங்களுடைய மதங்களை வளர்க்கிறார்கள்.

7) அதாவது இந்து மதத் துரோகிகளும், விரோதிகளும், நாத்திகர்களும், பகுத்தறிவாளர்களும், சீர்திருத்தவாதிகளும் தாங்கள் என்ன செய்கிறோம் என்று தெரியாமல் செயல்பட்டு மாற்று மதத்தவர்களும், வேற்று வேதத்தவர்களும், அன்னிய நாட்டவர்களும்; நமது பண்பாடு, நாகரிகம், கலை, கலாச்சாரம் (கலை+ஆச்சாரம்), இலக்கியம் முதலிய அனைத்தையும் சிதைப்பதற்குச் சிறப்பாக வழிவகை செய்து வருகிறார்கள். இதுதான் உண்மை, உண்மை, உண்மை.

**குறிப்பு:-** நமது இந்து மதத்தில்தான் அன்னியர்களின் கங்காணிகளும், கைக்கூலிகளும், காலிகளும், போலிகளும் தங்கள் தங்கள் விருப்பம் போல் இந்து மதத்தின் பெயரால் கட்சி, கழகம், சங்கம், மன்றம், கூட்டம், சபை என்று சில பெயர்களில் நிறுவன நிருவாகங்களை

வைத்துக் கொண்டு நம் மக்களைக் குழப்பி, கலக்கி, அன்னிய மதங்களுக்கு ஓடச் செய்கிறார்கள். அதாவது அன்னிய மதத்தவர்கள் மிக எளிதாக நம் மதத்தவர்களை அவர்கள் மதத்தவர்களுடன் சேர்த்துக் கொள்ள வசதி செய்து கொள்கிறார்கள். இது பற்றிச் சிந்தியுங்கள்.

8) ஆசிரியர் பணியிலிருந்து ஓய்வு பெற்றுள்ள பெரியீர்! தாங்கள் பணியிலிருந்தே காலம் முழுவதும் மாணவர்களுடன் பேசிப்பேசி; பேசுவதில் அலுப்பும், புளிப்பும், களைப்பும், சோர்வும், அயர்ச்சியும், தளர்ச்சியும், ... அடைந்து அநேகமாக மௌனியாகவோ அல்லது மெல்லிய குரலில் பேசும் சாதுவாகவோ மாறியிருக்கலாம்; ஒருவேளை மாறாமலும் இருக்கலாம். ஆனால், உண்மையில் இனிமேல்தான் நீங்கள் ஆசிரியர் பணியைச் செய்ய வேண்டும். ஆனால், நான்கு சுவர்களுக்கு இடையில் மாணவர்களுக்குப் பாடம் போதித்தது போல் அல்ல. அதாவது, தாங்கள் தங்களுக்குக் கிடைக்கக் கூடிய வாசல் பகுதி, தெருத் திண்ணை, அங்காடி வீதி, தேரடிப் பகுதி, கோயில் குளக்கரை, ஆற்றங்கரை, வயல்வெளி, களத்து மேடு, தொழிற்சாலை வாயில், ... என்று மக்களைச் சந்திக்கிற இடங்களில் எல்லாம் அவர்களில் ஆண் பெண் என்றோ, சிறார், இளைஞர், முதியோர் என்றோ வேறுபாடு பார்க்காமல் அனைவரையும் உங்களுடைய மாணவர்களாக எண்ணி அல்லது கற்பனை செய்து அல்லது ஏற்றிப் போற்றி உங்களுடைய கருத்துக்களைப் பாடமாகப் புகுத்த வேண்டும். “The Preachings and Teachings must take place wherever or whenever we meet the commons or publics. Then only we can eradicate all the ills and evils of the Society ...” - Taken from the writings of Mr M.P. Pillai, the President of The World Religious Research Society (TWRRS).

9) அதாவது நமது குருபீடத்தின் தந்தை சித்தர் காக்கையர் எனும் காகபுசுண்டர் ம.பழனிச்சாமி பிள்ளை அவர்கள் உலக மத ஆய்வுக் குழுவின் தலைமைப் பொறுப்பிலிருந்து எழுதிய ஆயிரமாயிரம் அஞ்சல்கள், கட்டுரைகள் இன்றைக்கு நமக்குத் தேவையான கருத்துக்களை வழங்குகின்றன என்பதற்காகவே அடைப்புக் குறியில் உள்ள ஆங்கில வாசகங்கள் தரப்படுகின்றன.

10) தங்களைப் போல் வாழ்க்கையில் அதிக நேரம் பேசிப் பழக்கப்பட்டவர்கள் நமது இந்துமதத்தின் அருமைபெருமைகளையும், அரிய கருத்துக்களையும், கொள்கைகளையும், குறிக்கோள்களையும், செயல்களையும் பற்றிய செய்திகளை மக்களிடையே அருளுரைகளாகவும் (Preachings), பாடப் போதனைகளாகவும் (Teachings) வழங்கிட்டால்தான் நம் நாட்டிற்கு ஒரு நல்ல வருங்காலம் உண்டாகும். அதாவது, தாங்கள் தங்களுடைய வாழ்நாளில் செய்தித் தாள்கள், புத்தகங்கள், வெளியீடுகள், அறிக்கைகள், அறிவிக்கைகள் பல படித்திருப்பீர்கள்; எண்ணற்ற புராண இதிகாசச் சொற்பொழிவுகள், விரிவுரைகள், கருத்தரங்குகள், பட்டிமன்றங்கள், அருளுரைகள், ... என்று பலவகைப்பட்ட பேச்சுக்களைக் கேட்டு இருப்பீர்கள். இவற்றை வழங்கிட்ட மதத் தலைவர்கள், சாமியார்கள், சன்னியாசிகள், சித்து விளையாடல்காரர்கள், மடாதிபதிகள், பீடாதிபதிகள், ஆச்சாரியார்கள், புராணியர்கள், கதை கூறுபவர்கள், கலை நிகழ்ச்சிக்காரர்கள், புலவர்கள், அறிஞர்கள், ... முதலியவர்கள் நேரடியாக இந்து, இந்து வேதம், இந்து மதம், இந்து மத வாழ்வு, இந்து மதச் சாத்திரங்கள், இந்து மதச் சடங்குகள், இந்து மத விழாக்கள், இந்து மதக் கடவுள்கள், இந்து மதப் பூசாறிகள், இந்து மத அருளாளர்கள், இந்து மத இலக்கியங்கள், இந்து மதப் பாதுகாவலர்கள், ... என்ற சொற்களையோ, சொற்களுக்குரிய பொருள்களையோ விளக்கி உரைத்ததாக உங்கள் நினைவில் ஏதேனும் சான்றுகள் உள்ளனவா? அதாவது இன்றைய நிலையில் நாம் நமது

இந்து வேதத்தையும், இந்து வேத வாழ்வியலே வழங்கும் இந்துமதத்தையும் பற்றிய கருத்துக்களேயும், செய்திகளேயும் நேரடியாக விளக்கி உரைக்கும் பணியில்தான் ஈடுபட வேண்டுமே தவிர வேறு பணிகளில் ஈடுபடக் கூடாது. அதுதான் உரிய பயனேத் தரும்.

11) நமது இந்து மத வாதிகள், பத்தர்கள், ... முதலியோர் கோயில்களில் ஆடம்பரமாகப் பூசைகளேச் செய்வதிலும், விழாக்களேக் கொண்டாடுவதிலும்தான் கருத்தையும், நேரத்தையும், காலத்தையும், பயிற்சியையும், முயற்சியையும், பொருளேயும், ... செலவிட்டு வருகிறூர்கள், செலவிட்டு வருகிறூர்கள், செலவிட்டு வருகிறூர்கள். இனியும் செலவிடுவார்கள், செலவிடுவார்கள், செலவிடுவார்கள். எனவே, இந்த நோக்கிலும், போக்கிலும் மிகப்பெரிய மாற்றங்களே உடனடியாக விரைவாகவும், விரிவாகவும் ஏற்படுத்தியே ஆக வேண்டும் நாம். அதாவது நம் மக்களே நமது மத இலக்கியங்களிலும், வரலாறுகளிலும், மத நிறுவனங்களிலும், மதத் தலேவர்களிடத்திலும் நேரடியான தொடர்பும், பற்றும் பாசமும், உரிமைமிகு உறவும், பெருமிதத் தோழமையும், நட்பும், தொடர்ந்த அறிமுகமும், ஆழ்ந்த ஈடுபாடும் கொண்டிருக்கும்படிச் செய்திடல் வேண்டும். அதுதான் கற்றவர்களாகிய நமது கடமை. இதைப் புரிந்து செயல்பட முன்வாருங்கள்; புரிந்து செயல்படுத்த முற்படுங்கள்.

12) நமது அறிமுகமும், புரிமுகமும், நட்பும், தோழமையும் மற்றவர்களேப் போல பத்திப் பாடல்களேப் பாடிவிட்டுத் திரிகின்ற பசனேக் கூட்டத்தார்களே உருவாக்கும் செயலில் சென்று நின்றுவிடக் கூடாது. அதாவது, நமக்குத் தேவை **கருத்துப் பரிமாற்றச் சிந்தனே அரங்குகள்** (க.ப.சி.அ.) என்ற **பயிற்சி முயற்சி நிகழ்ச்சிகள்.** இவை நமது நாடு முழுவதும் நிகழ்த்தப்பட்டேயாக வேண்டும், நிகழ்த்தப்பட்டேயாக வேண்டும், நிகழ்த்தப்பட்டேயாக வேண்டும். இதற்காகத்தான் பல்வேறு அலுவல்களுக்கிடையில் குவலய குருபீடம்,

குருமகாசன்னிதானம், ஞாலகுரு, நான்குயுக நாயகம், பரபிறம்மம், நிறையக்ஞர், அண்டபேரண்ட ஆதிஅனாதி சத்திகள் சன்னிதானம், கருமூலப் பண்டாரம், திருமூல ஆதீனம், கருகுல ஆதீனம், கருவறை மூலவர்களின் அம்மையப்பர், அந்தணர் அண்ணல், ஞானாச்சாரியார், சித்தர் அரசயோகிக் கருவூரார் உங்களை மதித்துப் போற்றி இந்த நெடிய அஞ்சலைத் திருவாய் மலர்ந்தருளியுள்ளார். இதைப் புரிந்து, நம்பி, விரும்பி, ஏற்றுச் செயல்பட முன்வாருங்கள்.

13) ஆசிரியப் பெருந்தகையே! தங்களைப் போல் தங்களுடைய ஊர், வட்டம், வட்டாரம், மாவட்டம் என்ற அளவில் பணியிலிருந்து ஓய்வு பெற்றவர் சங்கம் (Retired Officers' Association) என்ற ஓர் அமைப்பை உருவாக்குங்கள். இதற்காக நாலைந்து பேர் கிடைத்தாலும் சரி. அவர்களுக்கு ஒரு சில நாட்கள் ஞானாச்சாரியார் பயிற்சிகளை வழங்கினால் போதும்; அவர்கள் சிறு நெருப்புப் பொறியை உண்டாக்கினால் போதும்; அந்த நெருப்புப் பொறி மிகப் பெரிய அளவில் காட்டுத் தீயாக வளர்ந்து நமது மக்களிடையே காடு போல் மண்டி வளர்ந்துள்ள மத மறுப்பு, மத வெறுப்பு, மத எதிர்ப்பு, மத நம்பிக்கையின்மை, நாத்திகம், சீர்திருத்தம், பிற மத மோகம், ... முதலியவற்றை எரித்துச் சாம்பலாக்கி விடும்.

14) நீங்கள் வார வழிபாட்டு மன்றம் வைத்தால் குருபீடம் அண்மையில் வழங்கியுள்ள இந்துமத ஒலிப் பேழைகள் (Cassettes on Indhu Religion), இந்து வேத ஒலிப் பேழைகள் (Cassettes on Indhu Vedhas), அரசியல் தொடர்பான ஒலிப் பேழைகள் (Cassettes on Local Politics), சமுதாய நிலைகள் பற்றிய ஒலிப் பேழைகள் (Cassettes on Social Conditions), ... முதலியவைகளைத் தங்களுடைய வார வழிபாட்டு மன்றத்தில் ஒலிபரப்ப ஏற்பாடு செய்யுங்கள். முடிந்தால் ஒலி பெருக்கிகளை சாலை ஓரங்களில் கட்டி நமது கருத்துக்கள் சாலையில் போவோர் வருவோர் கேட்கும்படிச்

செய்ய வேண்டும். அன்றுடம் இச் செயல்திட்டம் சிலமணி நேரங்களாவது நிகழ்த்தப்பட வேண்டும்.

**<u>குறிப்பு:-</u>** மேற்படி ஒலிப் பேழைகளை நமது ஊர், வட்டம், வட்டாரம், மாவட்டம் முதலிய அளவில் நடக்கக் கூடிய குடும்ப விழாக்கள், கோயில் விழாக்கள், கல்வி நிறுவனங்களின் நிகழ்ச்சிகள் முதலியவற்றில் ஒலிபரப்ப முற்படுங்கள், முற்படுங்கள், முற்படுங்கள். <u>இதுவே சித்தர் கருவூரார் வார வழிபாட்டு மன்றத்தின் **முதற் கட்டச் செயல்திட்டம்**</u>.

15) **இரண்டாவது கட்ட செயல்திட்டமாக** பதினெண்சித்தர் மடத்திலிருந்து அச்சிட்டு வெளியிட்டுள்ள அறிக்கைகளையும், அறிவிக்கைகளையும் (Notices) ஊரின் பொது இடங்கள், கோயில்கள், அங்காடிகள், கல்வி நிறுவனங்கள் முதலிய இடங்களில் தொடர்ந்து அன்றுடம் சில மணி நேரமாவது வழங்கிக் கொண்டிருப்பதின் மூலம் உங்களுடைய ஊர், வட்டம், வட்டாரம், மாவட்டம் என்ற அளவில் நமக்கு ஆதரவாளர்களைத் திரட்ட வேண்டும். இதற்காகத் தங்கள் வீட்டில் அமைக்கப்படும் சித்தர் கருவூரார் வார வழிபாட்டு மன்றத்தின் தெளிவான முகவரியை அச்சடித்து வழங்க வேண்டும். தேவையான கருத்துக்களை பதினெண்சித்தர் மடத்திலிருந்து வெளியிட்டுள்ள அறிக்கைகளில் இருந்தும், அறிவிக்கைகளில் இருந்தும் தேர்ந்தெடுத்து நீங்கள் துவங்கும் சித்தர் கருவூரார் வார வழிபாட்டு மன்றத்து முகவரியுடன் புதிய அறிக்கைகளும், அறிவிக்கைகளும் அச்சிடுங்கள்.

**குறிப்பு:-** இதற்காக நன்கொடை திரட்டுங்கள். நன்கொடை தருவோரின் முகவரிகளையும் சேர்த்து அச்சிடுங்கள். நமது ஊர், வட்டம், வட்டாரம், மாவட்டம், மண்டலம் என்ற அளவிலுள்ள ஒருசில தொடர்பு முகவரிகளை இந்துவேதம் பரப்பும் நாயகம், சமயக் குரவர் நால்வரின் திருத்தோன்றல், தென்மண்டல அமைப்பாளர்

த. கேசவன் (266, உரக்கடை, கீழவெளி வீதி, மதுரை) அவர்களைச் சந்தித்துக் கலந்து பேசி முடிவெடுத்து புதிய அறிக்கைகளை அச்சிட்டு வெளியிடுங்கள்.

16) **மூன்றாவது கட்டமாகத்** தங்களுடைய சித்தர் கருவூரார் வார வழிபாட்டு மன்றத்தில் நமது பதினெண்சித்தர் மடத்தின் வெளியீடுகள் அனைத்தையும் தொகுத்து வைத்து வார வழிபாட்டு மன்றத்திற்கு வரக் கூடியவர்கள் படித்துப் பயனடையும்படிச் செய்ய வேண்டும்.

**குறிப்பு**:- தங்களின் சித்தர் கருவூரார் வார வழிபாட்டு மன்றத்தின் மூலம் அவ்வப்போது தங்களுடைய ஊர், வட்டம், வட்டாரம், மாவட்டம் என்ற அளவில் பதினெண்சித்தர் மடத்தின் வெளியீடுகளை விலைக்கு விற்க முற்படுங்கள்.

17) இப்பொழுது தாங்கள் பெற்றுள்ள இரண்டு அஞ்சல்கள் போல் பதினெண்சித்தர் மடத்திலிருந்து அன்றாடம் நாலைந்து அஞ்சல்களாவது நாட்டின் பல பகுதியினருக்கு எழுதப்படுகின்றன. இந்த அஞ்சல்களில் சிலவற்றிற்கு கைப்பிறதி நகல்கள், கார்பன் பேப்பர் நகல்கள், தட்டெழுத்து நகல்கள், இயந்திர நகல்கள் (Xerox copies) முதலியவற்றைத் தயாரித்து நீங்கள் அறிந்த பலருக்கும் அஞ்சல் வழியாகவும், நேரிலும் கொடுங்கள். அதில் நகல் தயாரித்து '<u>விருதுநகர் பகவத் சிங் பொறுப்பேற்றுள்ள சித்தர் கருவூரார் வார வழிபாட்டு மன்றம்</u>' என்ற பெயர் முழு முகவரியுடன் எழுதி வெளியிடுங்கள். இதன் மூலம் தங்களுடைய வார வழிபாட்டு மன்றத்தின் செயல்நிலைகள் பலரையும் ஊக்குவிப்பனவாக அமையும்.

18) சித்தர் கருவூரார் வார வழிபாட்டு மன்றத்தின் மூலம் அன்றாடம் அல்லது வாரத்தின் சில நாட்களில் கூட்டு வழிபாடு, ஓகாசனம், யோகாசனம், குண்டலினி, தீபம், பூசை, ... முதலியவைகளில் சிறுகச் சிறுகப் பயிற்சி வழங்குதல்.

19) சித்தர் கருவூரர் வார வழிபாட்டு மன்றத்தின் மூலம் இ.ம.இ., இ.மு.க. (I.M.I., I.M.K.) உறுப்பினர்களைச் சேர்த்தல், நிறுவன நிருவாகங்களை உண்டாக்குதல், இவற்றிற்கான சொற்பொழிவு நிகழ்ச்சிகளை ஏற்படுத்துதல், இவற்றிற்கான சுற்றுப்பயண நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்தல், ... முதலிய பணிகளைச் செய்வதோடு தலைமைப்பீடத்திலிருந்து குருதேவர் ஞானாச்சாரியார் அவ்வப்போது வழங்கக் கூடிய செயல்திட்டங்களை நிறைவேற்றுதல் என்று இந்த மூன்றாவது கட்டப் பணியை நிறைவு செய்கிறோம்.

20) **நான்காவது கட்டப் பணி**யாக சித்தர் கருவூரர் வார வழிபாட்டு மன்றத்தின் மூலம் ஒவ்வொரு கிராமத்திலும், முக்கியமான வட்டாரங்களிலும்; பொது இடங்களிலோ அல்லது தனிமனிதர்களின் இடங்களிலோ யாகசாலை வைத்து, திரிசூலம் நட்டு, மெய்ஞ்ஞானக் கொடியேற்றி சித்தர் கருவூரர் அருட்கோட்டங்களைத் தோற்றுவித்து; பொதுமக்களின் நாள், கோள், மீன் பாதிப்பாளர்கள்; நாகப் பாதிப்பு, செவ்வாய்ப் பாதிப்பு, சனிப் பாதிப்பு, கண்ணேறு, சாபம், ஊழ்வினை, வினை, விதி முதலிய பாதிப்புக்களால் பாதிக்கப்பட்டவர்கள்; மந்திரவாதிப் பாதிப்புக்களால் பாதிக்கப்பட்டவர்கள்; நோயாளிகள், பேயாளிகள் முதலியோருக்கு அருளை மருந்தாகவும், விருந்தாகவும் வழங்கும் பணிகளை நிகழ்த்துதல்.

21) **ஐந்தாவது கட்டமாக** நாட்டு நடப்பில் வாழும் பூசாறிகள், குருக்கள்கள், குருமார்கள், பண்டாரங்கள், ஓதுவார்கள், தேசிகர்கள், அருட்சினையாளர்கள், ... முதலியவர்களை ஆங்காங்கே குறுகிய காலப் பயிற்சி மையங்களை (Short-term Course Centres) உருவாக்கி; அவற்றின் மூலம் மேற்படி அனைவரையும் மெய்ஞ்ஞானக் கொடியும், திரிசூலமும், மயில்பீலியும் ஏந்தி மக்களுக்கு மந்திரிக்கும் கலையைக் கற்றுக் கொடுத்தல். அதாவது, நமது கோயில்களில் அவரவர் பெயருக்கு அருட்சினை செய்து கொள்வதும், அவரவர் தேங்காய்

பழம் படைத்து திருநீறு குங்குமம் பெற்றுக் கொள்வதும் நிகழ்வது போல் அவரவர் மந்திரித்து அருள்நலம் பெற்று; அவரவர்க்குள்ள இடுக்கண்கள், இன்னல்கள், இழப்புக்கள், இயலாமைகள், இல்லாமைகள், இழிவுகள், அழிவுகள், பழிகள், கறைகள், குறைகள், ... முதலியவைகளை அகற்றிக் கொள்ள உதவுதல், ... இயல்பாக நமது கோயில்களில் நிகழும்படிச் செய்ய வேண்டும். அப்பொழுதுதான் **நம்மவர்கள் மாற்றுமதக் கோயில்களையும், மந்திரவாதிகளையும், வேற்றுமொழி பூசாறிகளையும் தேடி ஓடி ஏமாந்து துன்புறும் நிலைகள், அவலங்கள், கேவலங்கள் முதலியவைகள் தடுக்கப்பட்டிடும், தடுக்கப்பட்டிடும், தடுக்கப்பட்டிடும்**.

22) **ஆறுவது கட்டமாக** நமது கல்வி, கலை, பண்பாடு, வாழ்வியல் நடைமுறைகள் முதலியவைகள் அனைத்தும் நமது இந்து வேதத்துக்கும், இந்து மதத்துக்கும் உரியவைகளாக ஆக்கப்பட்டே ஆக வேண்டும் என்ற கருத்தை, நோக்கை, போக்கை, கொள்கையைப் பொதுமக்கள் எல்லோரும் விரும்பி நம்பி ஏற்கும்படிச் செய்தல். இதற்காகப் பண்பாட்டுப் புரட்சிக்குரிய முயற்சிகளை (The attempts or the Initial steps for Cultural Revolution) உருவாக்குதல், நிகழ்த்தப்படுதல்.

23) இப்படி முருகனின் ஆறுபடை வீடுகள் போல் நமது சித்தர் கருவூரர் வார வழிபாட்டு மன்றத்தின் செயல்நிலைகள் ஆறு (6) வகைப்பட்ட நிலைகளை அடையட்டும், அடையட்டும், அடையட்டும். இவற்றை நிறைவேற்றத் தாங்கள் அடிக்கடி மதுரைக்குச் சென்று வாருங்கள். மதுரையில் இருக்கும் தென்மண்டல நிர்வாகக் குழு உறுப்பினர்களை அடிக்கடி விருதுநகருக்கு வரச் சொல்லுங்கள். அப்பொழுதுதான் சித்தர் கருவூரர் வார வழிபாட்டு மன்றம் மிகப்பெரிய வெற்றியினைப் பெறும். இவற்றைத் தெரிந்த வரை தெரிந்து, புரிந்த வரை புரிந்து செயல்படுத்துங்கள்.

24) இதற்கு முன் தங்களுக்கு எழுதப்பட்ட 26-6-92ஆம் நாளைய அஞ்சலுக்கும், இன்று 4-7-92இல் எழுதியுள்ள இந்த நெடிய அஞ்சலுக்கும் தாங்களோ அல்லது தங்களின் மூலம் பிறரோ கருப்பு மையில் அழகான கையெழுத்தில் நகல் எழுதி (Xerox) இயந்திர நகல்கள் பல தயாரித்து தலைமைப் பீடத்திற்கு அனுப்பினால் குருபீடம் இந்த நகல்களை நான்கு மண்டலத்திலும் உள்ள முதன்மையான அடியான்களுக்கும், அடியாள்களுக்கும், அடியார்களுக்கும் அனுப்பி உங்களைப் பற்றிய அறிமுகத்தையும், நம்மவர்கள் ஆற்ற வேண்டிய கடமைகளையும் விளக்கலாம், வளர்க்கலாம்; விளக்கலாம், வளர்க்கலாம்; விளக்கலாம், வளர்க்கலாம். இதற்குத் தங்களுடைய விரிவான பதில் தேவை.

**தென்னாடுடைய சிவனே போற்றி!**
**எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி!**
**அர அற நமப் பார்வதிப் பாதமே போற்றி!**
**அர அற மகாதேவப் பாதமே போற்றி!**
**ஓம் திருச்சிற்றம்பலம் ஓம்**

அன்புடன்
**தலைவர்,**
**குருதேவர், ஞானாச்சாரியார், குருமகாசன்னிதானம்,**
**ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூரார்,**
5-7-92.

பதினெண்சித்தர் மடம்,
இந்து வேத பாடசாலை,
இந்து முன்னேற்றக் கழகம்,
வரதராசபுரம், அம்பத்தூர், சென்னை - 600053.

**//உண்மை நகல்//**
**//இதன் மூலநகல்: தட்டெழுத்து நகலாக இருந்தது.//**

# வரலாற்றுச் சிறப்பு மிக்க சேலம் மாவட்டப் பயிற்சி முகாம்

பொன்னேரி,

17-2-92.

அனுப்புநர்:

ஞானச்சாரியார்,

ஞாலகுரு சித்தர் கருவூரர்,

3, என்.சி.ஓ.நகர், பொன்னேரி - 601204.

பெறுநர்:-

சேலம் செவ்வாய்ப்பேட்டை காளியம்மன் சன்னிதானம்,

ப. கோவிந்தராசு,

2/108, பண்டரி கோயில் தெரு,

வேம்படிதாளம் அஞ்சல், சேலம் - 637504.

இ.மு.க.வின் சேலம் மாவட்ட நிர்வாகக் குழு நடத்தும் 1992 மார்ச்சு மாத க.ப.சி.அ. (கருத்துப் பரிமாற்றச் சிந்தனை அரங்கம்) இந்து மத ஆண்டு 43,73,093 மாசி 5ஆம் நாள் திங்கட் கிழமை முழுநிலவு நாள் கும்பகோணம் மாசிமக அருளூறு திருநாள் இ.மு.க. சேலம் மாவட்டப் பொருளாளர் அருள்மிகு சேலம் பேட்டைக் காளியம்மன் சன்னிதானம் சித்தரடியான் வேம்பை

கோவிந்தராசு அவர்களுக்கு இ.மு.க.வின் பாரம்பரியத் தலைவர், குவலய குருபீடம், குருதேவர், இந்து மதத் தந்தை, இந்து வேத நாயகம், ஞானாச்சாரியார், குருமகாசன்னிதானம், ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூறார் விடுத்துக் கொள்ளும் செயல்நலம் பாராட்டுத் திருவோலை; செயல்திட்டப் பரிந்துரை அறிவிக்கை.

1. தங்களுக்கும், தங்கள் துணைவியாருக்கும், குழந்தைகளுக்கும், உற்றார் உறவினருக்கும், ஊராருக்கும் எல்லா நலன்களும், வளங்களும் உண்டாகுமாறு வாழ்த்துகிறோம்.

2. இதுவரை க.ப.சி.அ. முழுமையாகத் திருத்தணியிலும், துவக்க நிலைக்குரிய முதல் கட்ட நிலையாக கோவை மாவட்டச் சிறுமுகையிலும் நடந்தேறியுள்ளன. மூன்றாவதாக சேலம் மாவட்டத்தில் நிகழ்ந்திட வேண்டுமென்ற பெருவிருப்பில் இ.மு.க.வின் சேலம் மாவட்ட நிர்வாகக் குழு ஈடுபட்டிருக்கிறது. அதற்காக வாழ்த்தையும், பாராட்டையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

**குறிப்பு:-** இத் திருவோலையை நிர்வாகக் குழுவினரிடமும், இ.மு.க. முன்னணியினரிடமும், நமது பழைய, புதிய ஆதரவாளர்களிடமும் படித்துக் காட்டுங்கள்.

3. நிகழவிருக்கும் க.ப.சி.அ. நமது கழகத்தின் உயிர்நாடியான முன்னணிச் செயல்வீரர்களை உடல், உயிர், உள்ளம், சிந்தை, உடைமை எனும் ஐந்திற்கும் உள்ள ஆரம்ப நிலைகளையும், முடிவு நிலைகளையும், உறவு நிலைகளையும், உரிமை நிலைகளையும், சத்தி நிலைகளையும் புரிந்து கொள்வதற்காக யோகாசன, ஓகாசனப் பயிற்சிகளை வழங்குவது என்பது முதன்மையான செயல்திட்டம். அடுத்து தமிழ் எழுத்துக்களை எப்படி உச்சரித்து ஆதகர், ஈதகர், ஊதகர், ஏதகர், ஓதகர் என்ற ஐந்து நிலைகளைப் பெறுவது? என்ற பயிற்சிகளை வழங்கல்.

4. பதினெண்சித்தர்கள் இந்து வேதத்தையும், இந்து மதத்தையும் காலப்போக்கில் ஏற்படக் கூடிய அனைத்து வகையான பாதிப்புக்களிலிருந்தும் பாதுகாப்பதற்காக பதினெண்சித்தர் பீடாதிபதிகளின் மூலம் தோற்றுவித்திடும் இந்து மறுமலர்ச்சி இயக்கத்தையும், அதன் கீழ் அமையும் 48 வகையான நிறுவன நிர்வாகங்களையும் நம் காலத்தில் மீண்டும் எப்படி எப்படித் தோற்றுவிப்பது?; அவற்றின் மூலம் என்னென்ன செயல்களைச் செய்வது? என்பது பற்றிய கலந்துரையாடல் நிகழ்த்துவது.

5. முழுக்க முழுக்க இந்து வேதத்திலும், இந்து மதத்திலும் ஈடுபட்டுச் செயல்பட விரும்புபவர்களுக்குரிய இந்து மறுமலர்ச்சி இயக்கத்தையும், இந்து வேத மத அடிப்படையில் கலை இலக்கியத் துறைகளில் என்னென்ன செய்ய வேண்டும் என்பதை திட்டம் தீட்டவும், நடைமுறைப்படுத்தவும் உருவாக்கப்பட்டுள்ள இ.மு.க. எப்படி விரைந்து விரிந்து எல்லா மாவட்டங்களிலும், பேரூர்களிலும், சிற்றூர்களிலும், கிராமங்களிலும், பட்டி தொட்டிகளிலும் கிளைக் கழகங்களைப் பெற்றிடுவது என்பது பற்றிச் சிந்திப்பதற்காகவும் கூடுகிறோம்.

6. குருதிப் பலி ஏற்கக் கூடிய கடவுள்களுக்கும், கோயில்களுக்கும்; கோயில் சார்ந்த பூசாறி, பண்டாரம், குருக்கள், உவச்சர், அருட்சகர் (அர்ச்சகர்), ... முதலியோருக்கும்; அருள் ஊற்று நிலையை, ஞான வளர்ச்சி நிலையை, பிறருக்கு மந்திரித்து அருள்வழங்கும் பீட நிலையை, எல்லாப் பாதுகாப்புக்களும் தரக்கூடிய உயிர்ப்பு நிலையை, காலப்போக்கில் ஏற்பட்டு விட்ட அனைத்து வகைப்பட்ட பாதிப்புக்களையும் நீக்குவதற்குரிய புத்துயிர்ப்பு நிலையை இம்மண்ணுலகில் 12வது முறையாக மீண்டும் வழங்குவதற்கு அருட்கொடை வள்ளல், இந்து வேத நாயகம், இந்து மதத் தந்தை, நிறை யக்ஞர், அந்தணர் அண்ணல், ஞானாச்சாரியார், ‘அருட்பணி விரிவாக்கத் திட்டச் சுற்றுலா’ வருகிறார் என்பது இந்தச் சேலம் மாவட்ட க.ப.சி.அ.வில் செயலாக வேண்டும்.

இதற்காக நம்மவர்கள் நாளேடு (தினத்தாள் Daily Newspaper), துண்டு அறிக்கை, அறிவிக்கை, ஒலிபெருக்கி, ... முதலியவைகளின் மூலம் விளம்பரம் செய்ய வேண்டும். முடிந்தால் நம்மவர்கள் அவரவர் வசதி வாய்ப்பிற்கேற்ப சுற்று வட்டாரக் கோயில்களில் ஊழியம் செய்யக் கூடியவர்களுக்கு நேரில் சென்று இந்த அறிவிப்பைத் தாருங்கள். அதன்படி,

(a) ஞானுச்சாரியார் செல்லுகின்ற கோயில்களுக்கு சக்கரம் வழங்கப்படும். கோயில் ஊழியர்களுக்கு நெற்றி, கழுத்து, மார்பு, இரு தோள்பட்டை ஆகிய ஐந்து இடங்களில் சந்தனம் தடவப்பட்டு சக்கரங்கள் எழுதப்பட்டு, தீட்சை வழங்கப்பட்டு, உருத்திராக்கம் வழங்கப்படும்.

(b) பயிற்சி முகாமிற்கே தேடி வரக்கூடிய கோயில் ஊழியர்களுக்கு ஏதேனும் ஒரு நாளில் அல்லது அன்ருடம் ஒரு குறிப்பிட்ட நேரத்தில் ஞானதீட்சை வழங்கவும், உருத்திராக்கம் வழங்கப்படுவதற்கும் ஏற்பாடு செய்க.

(c) கோயிலில் ஊழியம் செய்யாத ஆர்வலர்களுக்கு ஞானதீட்சை, உருத்திராக்க மாலே வழங்க வேண்டுமென்ருல், அவர்கள்;

i. இ.ம.இ.யில் உறுப்பினராக வேண்டும்.

ii. இ.மு.க.விலும் உறுப்பினராக வேண்டும்.

iii. சித்தர் கருவூரர் வாரவழிபாட்டு மன்றத்திலும் உறுப்பினராக இருக்க வேண்டும்.

iv. பதினெண்சித்தர் மடத்திற்கு ரூ.101/-க்குக் குறையாமல் குரு காணிக்கை செலுத்த வேண்டும்.

7. குருதிப் பலி இல்லாத கோயில்களுக்கு மட்டுமே சங்கராச்சாரியார் மடம், மதுரை மடம், மாயவரம் மடம், திருவாவடுதுறை மடம், திருப்பனந்தாள் மடம் முதலிய மடத்தார்கள் புத்துயிர்ப்பு, குடமுழுக்குச்

சக்கரம் தருகிறார்கள் என்ற இக்கருத்தை நம்மவர்கள் பொதுமக்களுக்குக் கூற வேண்டும்.

8. இந்தக் க.ப.சி.அ. நடக்கும் 4 நாட்களில் அன்றாடம் மாலையில் பொதுக் கூட்டமோ, அல்லது ஏதேனும் ஒரு கோயிலில் அருளுரை ஆற்றுவதோ அல்லது மாலையில் இந்து மதம் பற்றிய ஐயங்களுக்கு நேருக்கு நேர் விளக்கம் தரப்படும் என்ற நிகழ்ச்சியோ; அல்லது பயிற்சி முகாமிற்கே தேடி வருகின்றவர்களும், அந்த வட்டாரப் பொதுமக்களுக்குமாகச் சேர்த்து அன்றாடம் மாலையில் குறைந்தது 1 மணி நேரம் அல்லது 2 மணி நேரம் ஞானாச்சாரியார் அருளுரை ஆற்றவோ ஏற்பாடு செய்யலாம்.

**குறிப்பு:-** இதில் அருட்கணிப்பு செய்தலோ, இட்டும் தொட்டும் சுட்டியும் அருள் வழங்கப் பெறலோ சேர்க்கக் கூடாது.

9. சேலம் மாவட்டம், அதன் சுற்று வட்டாரத்திலும் இந்து மதம் சார்பாக உள்ள அனைத்து வகைப்பட்ட மடங்கள், கோயில்கள், சங்கங்கள், மன்றங்கள், சபைகள், கட்சிகள், ஆர்வமிக்க தனிமனிதர்கள், தமிழ்ப் புலவர்கள், ஓய்வு பெற்ற அரசு அலுவலர்கள் (Retired officials), ... முதலிய அனைவருக்கும் ஞானாச்சாரியார் வருகையைத் தெரிவிப்பது நல்லது, நல்ல பயனைத் தரும்.

10. நமது கழகத்திற்கு இளைஞர்கள் தேவை. எனவே, பள்ளிகள், கல்லூரிகள், ... முதலியவைகளுடன் தொடர்பு கொண்டு இளைஞர்களைச் சந்தியுங்கள். முடிந்தால் அவர்களை ஞானாச்சாரியார் சந்திக்க ஏற்பாடு செய்யுங்கள் அல்லது ஞானாச்சாரியார் அங்கு சென்று சொற்பொழிவாற்ற ஏற்பாடு செய்யுங்கள்.

11. எந்த வட்டாரத்தில் குருதேவர் சொற்பொழிவாற்றுகிறாரோ அந்த வட்டாரத்தில் க.ப.சி.அ. 1 to 4 ஒலிப் பேழைகளையும் ஒருமுறை ஒலிக்கச் செய்திடுங்கள். 1, 4 இரண்டையும் தேநீர்

விடுதி, முடிதிருத்தும் நிலையம், சலவை நிலையம் ஆகிய இடங்களில் ஒலிபரப்ப முயலுங்கள். (இந்த ஒன்று (1) மற்றும் நான்கு (4) என்ற வரிசை எண் தரப்பட்ட இரண்டு கேசட்டை விலை குறைவான ஒலிப்பேழைகளில் பதிவு செய்து எல்லா இடங்களிலும் ஒலிபரப்பச் செய்யுங்கள்.)

மற்ற விளக்கங்களுக்கு தாங்களோ, வேறு யாரேனும் ஒருவரோ சென்னை வந்தால் நல்லது. அடிக்கடி அஞ்சல்கள் எழுதி தொடர்புகளை வளர்த்துக் கொள்ளுங்கள்.

ஓம் திருச்சிற்றம்பலம் ஓம்.

அன்பு

**குருதேவர்,**

**ஞானாச்சாரியார்,**

18-2-92.

**//உண்மை நகல்//**
**//இதன் மூலநகல்: சித்தரடியார் திரு இரா. சீனிவாசன் அவர்களின் கையெழுத்தில் இருந்தது.//**

# கடவுள்களுக்கு எல்லை உண்டு!

1991 January 25 Friday

கடவுள்களுக்கு எல்லை உண்டு. இதுவே இந்து வேதத் தத்துவம்; இதுவே இந்து வேதச் செயல் சித்தாந்தம்; இதுவே இந்து வேதப் பூசைமுறை; இதுவே இந்து வேதப் பூசைவிதி; இதுவே இந்து வேதச் சடங்கியல் சாத்தரம், சாத்திரம், சாத்திறம்.

எனவேதான், ஒவ்வொருவரும் இந்தியாவின் எந்த மூலையில் வாழ்ந்தாலும் சரி, உலகின் எந்தப் பகுதியில் வாழ்ந்தாலும் சரி, எவ்வளவு ஏழையாக இருந்தாலும் சரி; கடன் வாங்கிக் கொண்டாவது தங்களுடைய விருப்ப தெய்வம் அல்லது குடும்ப தெய்வம் அல்லது குல தெய்வம் அல்லது பூர்வீக ஊர்த் தெய்வம் எங்கேயிருக்கிறது என்று தேடி வந்து அங்கு வந்துதான் தங்கள் குழந்தைகளுக்கு முடி எடுப்பார்கள், திருமணம் செய்வார்கள். தங்களுடைய சொந்த பந்தங்களுடன் சில ஆண்டுகளுக்கு ஒருமுறை வந்து பூசைகள் சிறப்பாகச் செய்து வழிபாடு செய்து, வணங்கி விட்டு, வேண்டுதல் நிறைவேற்றிச் செல்வார்கள்.

ஏனென்றால் கடவுள் தனக்கென்று உள்ள ஒரு எல்லையைத் தாண்டி வேறு எங்கும் வராது! வராது! வராது! இதுதான் கடவுளைப் பற்றிய உண்மை! உண்மை! உண்மை! உண்மையே உண்மை.

இதன்படிப் பார்த்தால் கடவுள்கள் அவரவர் காலத்திய வாழ்வியல் சத்தி, சித்தி, முத்திகளுக்கும், மற்ற சாதனைகளுக்கும் ஏற்பத்தான் தங்களுடைய அருளாட்சிக்கென்று ஒரு குறிப்பிட்ட தொலைதூர எல்லைப் பரப்பளவை பெற்றிடுகின்றார்கள், அல்லது பெற்றிருக்கிறார்கள்,

அல்லது பெற்றிடுவார்கள் என்பதே கடவுள்கள் பற்றிய மெய்யான விளக்கமாகும்.

அதனால்தான் அருளூறு பூசைமொழிகளின் மூலம் ஒவ்வொரு மனிதனும் பூசைவிதிகளின்படி, பூசை மொழிகளைக் கூறிப் பூசை செய்து தேவையான சத்தி சித்தி முத்திகளைப் பெற்றுக் கொள்ள வேண்டும். அதாவது தங்களுக்கென உள்ள தெய்வங்களின் கருவறைக்கு குறிப்பிட்ட கால இடைவெளியில் பூசை செய்து தேவையான சத்தி, சித்தி, முத்திகளைப் பாதுகாப்பைப் பெற்று வர வேண்டும்.

அதற்காக அருட்சினை செய்து கொள்ளுதல், காணிக்கை செலுத்துதல் ஆகியனவற்றோடு அருளூறு பூசனைப் பொருட்கள், முடிகயிறு, தாயத்து, சிலைகள், படங்கள் முதலியவற்றைக் கருவறையில் வைத்து அருளேற்றிக் கொண்டு செல்வார்கள். இப்படி வைத்து எடுக்கும் பொருள் குறிப்பிட்ட கால அளவுதான் சத்தியுள்ளதாக இருக்கும். அதனால்தான் கருவறையில் அருளேற்றிய பொருள்களை குறிப்பிட்ட கால இடைவெளியில் அடிக்கடி சொந்தக்காரர் அல்லது உறவினர் மூலம் வரவழைக்கும் முறை இருக்கிறது.

**//இந்த இந்துவேதக் குறிப்பு சித்தரடியான் திரு இரா. சீனிவாசன் அவர்களால் 1991ஆம் வருடத்திய நாட்குறிப்பேட்டில் எழுதப்பட்டிருந்தது.//**





மெய்ஞ்ஞானக்கொடி



**11வது பதினெண்சித்தர் பீடாதிபதி** **12வது பதினெண்சித்தர் பீடாதிபதி**

தஞ்சைப் பெரிய கோயிலைக் கட்டிய 11வது பதினெண்சித்தர் பீடாதிபதி, குருமகாசன்னிதானம், ஞாலகுரு சித்தர் காவிரியாற்றங்கரைக் கருவூரார் அவர்களின் (கி.பி.785 – 1040) பாரம்பரியத்தில் 12வது பதினெண்சித்தர் பீடாதிபதியாகத் திருத்தோற்றம் எடுத்த ஞானாச்சாரியார் **குருமகாசன்னிதானம், ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூரார்** அவர்களின் குருவாணைப்படி இந்துவேத இலக்கியங்கள் இதில் வெளியிடப்படுகின்றன. இவை ஞாலகுரு அவர்கள் அமைத்திட்ட கையெழுத்துப் பிறதி நூலகங்களில் தாள் நைந்து, எழுத்து மங்கி, அழிந்து கொண்டிருக்கும் நகல்களின் பிறதிகளாகவே வழங்கப்படுகின்றன.

Published under the Divine Grace of His Holiness the 12th Pathinensiddhar Peedam, Gurudevar, Gnaalaguru Siddhar Arasayogi Karuvooraar by the Anaathi Sankaraachaariyaar Peedam Trust, (Regd) East Tambaram, Chennai. Printed by Mr. Sivaraman, Kamarajapuram, East Tambaram. Cell:09972130609 at Sri Vignesh Printers, Madurai.

https://newsletters.gurudevar.org
https://gurudevar.in
https://induism.org
https://books.gurudevar.org
https://gurudevar.org
Email: indhuism@gmail.com

**காணிக்கை: ரூ.10/-**